தேதி: 06.08.2026,

TVK (தவெக) அரசு சமர்ப்பித்த பட்ஜெட்டில் இந்த நாட்டிற்கே வயலில் பாடுபட்டு சோறு போடும் விவசாயத் தொழிலாளர்களுக்கு எதுவும் சொல்லப்படவில்லை. விவசாயத் தொழிலாளர்கள் இல்லையென்றால், யாருக்கும் உணவு இல்லை இந்த நாட்டில். விவசாயிகளுக்கும் உணவு இல்லை. காரணம் வயலில் பாடுபடுவது விவசாயத் தொழிலாளர்களே, விவசாயிகள் அல்ல. விவசாயிகள் தங்கள் பணத்தை வயலில் போட்டால் அது நெல்லாக, வாழையாக, தென்னையாக வளர்ந்துவிடுமா? மக்கள் அனைவரும் சாப்பிடும் ஒவ்வொரு உணவுப் பொருளிலும் , விவசாயத் தொழிலாளர்களின் ரத்தமும் வியர்வையும் கலந்து உள்ளது. இந்த நாட்டின் உயிர்நாடியாகவும் உயிர் மூச்சாகவும் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு எங்கே சலுகைகள். விவசாயத் தொழிலாளிகளே இதை நியாயம் தானா? அரசிடம் கேளுங்கள்.

மில்கள், கம்பெனிகள் , பேக்டரிகள் என்று தனியார் துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் எதுவும் சொல்லப்படவில்லை. தனியார் துறையில் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக குறைந்த கூலிக்கு அதிக நேரம் வேலை செய்கிறார்கள் இவர்களுக்கு தொழிற்சங்க உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தொழிலாளர் நலச்சட்ட உதவிகளும் மறுக்கப்படுகின்றன. இவர்களுக்கு பட்ஜெட்டில் எதுவும் சொல்லப்படவில்லை. இது நியாயம்தானா? இதை தட்டிக் கேளுங்கள் அரசிடம்.

தூய்மைப் பணியாளர்களுக்கு TVK சமர்ப்பித்த பட்ஜெட்டில் எதுவும் சொல்லப்படவில்லை. தூய்மைப் பணியாளர்கள் இல்லை என்றால் வீதிகள் அனைத்தும் குப்பை மேடுகளாக மாறியிருக்கும். இந்த நாடே நாற்றம் எடுத்துவிடும் நோய்கள் தொற்றிவிடும். இந்த நாடு தூய்மையாக சுகாதாரமாக இருக்க அத்தனை அசுத்தங்களையும் அகற்றும் இந்தப் புனிதத் தொழிலாளர்களுக்கு பட்ஜெட்டில் எதுவும் சொல்லப்படவில்லை வாழ்வாதாரத்தைப் பறிப்பதற்கு தனியாரிடம் தூய்மைப் பணியை ஒப்படைக்க எத்தனிக்கிறது இந்த TVK அரசு. தூய்மைப் பணியாளர்கள் இதைத் தட்டிக் கேளுங்கள்.

நாம் அனைவரும் பயமின்றி வாழ 24 மணிநேரமும் சரியான உணவு,ஓய்வு,உறக்கம் இன்றி பாடுபடும் காவல்துறையினருக்கு இந்த TVK சமர்ப்பித்த பட்ஜெட்டில் எதுவும் சொல்லப்படவில்லை. காவல்துறை இல்லை என்றால் மக்கள், M.L.A., M.P., மந்திரிகள், முதல் மந்திரி என்று எவரும் பயமின்றி வாழமுடியாது. அப்படிப்பட்ட காவல்துறையினரின் நலங்கள் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை இந்த பட்ஜெட்டில் இது நியாயம் தானா கேளுங்கள் அரசிடம்.

C.M. Raju)
Founder

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் எழை, எளிய மாணவர்களுக்காக மதிய உணவுத்திட்டத்தை கொண்டு வந்தார். மதிய உணவுத்திட்டத்திற்கு காமராஜர் பெயரை சூட்டாமல் திமுக கொண்டுவந்த காலை உணவு திட்டத்திற்கு காமராஜ் காலை உணவுத் திட்டம் என்று பெயர் சூட்டியது காமராஜருக்கு இழைக்கப்பட்ட அவமரியாதை. எந்த முட்டாளும் இதை ஏற்கமாட்டன், அரசு அதிகார மமதையில் இதை செய்துள்ளது. இது தண்டிக்கத்தக்கது தண்டிக்கத்தக்கது. காமராஜர் தொண்டர்கள் இதை ம வேண்டும். குரல் கொடுங்கள் இதற்கு எதிராக. காவல்துறை மொத்தத்தில் இந்த பட்ஜெட் அடுத்தவர் வளர்த்த மரத்துக்கு தனது பெயரை ஒட்டு உள்ள் பட்ஜெட். மக்களுக்கு தெரியும் யார் மரம் வைத்தது என்று.

C.M. Raju, the Chalukkiyan,
Founder of
'We For Red India'

ஜெய் பாரத்
ஜெய ஜெய பாரத் ஜெய ஜெய பாரத்
வந்தே மாதரம் வந்தே மாதரம்
இன்குலாப் ஜிந்தாபாத் இன்குலாப் ஜிந்தாபாத்